சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 64/2019

பெயர் திருமதி. ரமணி நாள். 30.06.2026
க/பெ. ராமச்சந்திரன்

**<u>4ம் பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி தனக்கு பங்கு வேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி மற்றும் 1முதல் 3 பிரதிவாதிகள் அர்ஜுனனின் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண் எனக்கு தெரியாது. வழக்கு 2ஏக்கர் 9 சென்டிற்கு நடைபெறுகிறது. வழக்கு சொத்துக்கள் வாதியின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல. சொத்துக்களை அர்ஜுனன் கிரையம் வாங்கி எங்களுக்கு விற்றுள்ளார். நாங்கள் கிரையம் வாங்கிய சொத்துக்கள் அர்ஜுனன் என்பவர் நாராயணன், சுப்ராயன், குப்புசாமி மற்றும் கிருஷ்ணன் வகையாரா ஆகியவரிடம் இருந்து கிரையம் வாங்கினார். பி.த.சா.ஆ.1 ன் கீழ் அர்ஜுனன் மற்றும் வீராசாமி ஆகியோர் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார் என்றால் சரிதான்.

2. பி.த.சா.ஆ.1 ன் கீழ் பாகத்தில் வந்த சொத்துக்களை அர்ஜுனன் மற்றும் 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் இல்லை. அர்ஜுனனுக்கு மட்டும் உரிமை இருந்தார் அவர் மட்டும் கிரையம் அளித்திருப்பார் என்றாலும், அவருடைய வாரிசுகளுக்கும் உரிமை உண்டு என்றால் 1,2 பிரதிவாதிகளும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்

கிரைய ஆவணத்தில் வாதி எவ்வித கையொப்பமும் செய்யவில்லை. என்னுடைய கிரைய ஆவணத்தை யாரும் படித்துக் காண்பிக்கவில்லை. என்னுடைய கிரைய ஆவணத்தில் அர்ஜுனனுக்கு பி.த.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் கீழ் சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய சொத்தில் வாதிக்கு பங்கு உண்டு என்றாலும், அதனால் என்னுடைய கிரையம் செல்லாது என்று சொன்னாலும் சரியல்ல. வாதிக்கு அர்ஜுனின் பூர்வீக சொத்தில் பங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல.

3.வாதியின் பாக சொத்தை நான் வாங்கியிருந்தால், அதில் வாதிக்கு பங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. மற்ற சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் அதில் வாதிக்கு பங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு பங்கு உண்டு என்பதால் தான் 1முதல் 3 பிரதிவாதிகள் வழக்கில் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள அர்ஜுனன் கிரைய ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் அர்ஜுனனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அதனால் தான் வாதி அதை எவ்வித பங்கு உரிமையும் கோரவில்லை என்றால் சரியல்ல.

4. பி.த.சா.ஆ.2 முதல் 33 ஆவணங்களை வைத்து வாதிக்கு வழக்கு சொத்துக்களில் பாக உரிமை இல்லை என்று சொல்ல இயலாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞருக்கு என் கணவர் தான் தகவல்

கூறினார் என்றால் சரிதான். முதல் விசாரணை வாக்குமூல சங்கதிகள் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், என் கணவருக்கு தான் தெரியும் என்று சொன்னாலும் சரிதான். வாதியின் கணவரும், என் கணவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்குமிடையே குடும்ப சொத்துக்களை தகராறு ஏற்பட்டு செய்யூர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் மதுராந்தகம் குற்றவியல் நீதிமன்றத்தில் இருவருக்குமிடையே குற்ற வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் முடிந்துவிட்டது. அந்த முன் விரோதம் காரணமாகத் தான் வாதிக்கு பாகம் கொடுக்ககூடாது என்று பொய்கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு பங்கு உண்டு என்றாலும், அவர் கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**